**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Thinai Marabu and Yappu in the Agam texts of *Pathinenkeelkanakku*

**S.Murugeswari,** Research Scholar (Full Time), Sethupathi Tamil Research Center, Department of Tamil, Sethupathi Govt Arts College, Ramanathapuram.
**ORCiD: https://orcid.org/0000-0003-2155-3678**
**Dr. R. Athisayam, Research Guide,** Assistant Professor, Sethupathi Tamil Research Center, Department of Tamil, Sethupathi Govt Arts College, Ramanathapuram.
**DOI: 10.5281/zenodo.6622415**

## Abstract

*'Pathinenkeelkanakku' is about 18 Siriyakanakku- Aram (Virtue) books. This book is about the good values of life. It also evinces the way of leading good life for the people in a didactic manner. It delivers hopeful ideas to the people in a sincere way. In it, it delineates the facts from the six Agam texts, Thinai marabu and Yappu. In every thinai, valuable facts are without change about the Thinai marabu and Yappu. Hence, this article decodes the main ideas from the chosen theme.*

**Keywords:** Thinai Marabu, Yappu, Agam texts, *Pathinenkeelkanakku.*

## References

[1] Senavarayar Urai. *Tholkappiam, Sollathikaram*.
[2] Tamilannal. *Tholkappiam, Potulathikaram.*
[3] Manickavasakan. *Silappathikaram.*
[4] *Paripadal*. Kalaga Veliyeedu.
[5] *Maduraikanji, Patthupaattu*. Kalaga Veliyeedu.
[6] *Purananuru*. Kalaga Veliyeedu.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# பதினெண்கீழ்க்கணக்கு அகநூல்களில் திணை மரபும் யாப்பும்

**ச.முருகேஸ்வரி,** முனைவர் பட்ட ஆய்வாளர், சேதுபதி தமிழ் உயராய்வு மையம்,
சேதுபதி அரசினர் கலைக் கல்லூரி, இராமநாதபுரம்.
ORCiD: https://orcid.org/0000-0003-2155-3678
**முனைவர் ர. அதிசயம்,** நெறியாளர், உதவிபேராசிரியர், சேதுபதி தமிழ் உயராய்வு மையம்,
சேதுபதி அரசினர் கலைக் கல்லூரி, இராமநாதபுரம்.
**DOI: 10.5281/zenodo.6622415**

**ஆய்வுச்சுருக்கம்**

பதினெண்கீழ்க்கணக்கு என்பது பதினெண்-18 கீழ்- சிறியகணக்கு-அறம் 18 நூல்களும் அடி; அளவில் குறைந்து காணப்படும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் நல்லறங்களையும் நல்கருத்துக்களையும், நல்லொழுக்களையும் விளக்குகிறது. மக்களுக்கு தேவையான அடிப்படை செய்திகளை பகுக்கின்றது. அவற்றில் அகநூல்களில் ஆறிலும் உள்ள கருத்துகளையும், திணைமரபு பற்றியும் யாப்பு பற்றியும் மையமிட்டு விளக்குகிறது. ஒவ்வொரு திணைக்கும் அறிய கருத்துகளை சிறிதும் மாறாமல் திணைமரபும் யாப்பும் அமைந்திருக்கிறதை காண முடிகிறது.

**திறவுச்சொற்கள்:** தொண்டு, யாப்பு, ஒழுக்கம், நல்ல, கதை.

**முன்னுரை**

உலகமொழிகளில் சிறந்து விளங்க கூடியது நம் தமிழ்மொழி. தமிழ்மொழியின் பெருமையை இவ்வுலக மக்கள் அறிவர். மனிதவாழ்வியலுக்கு இலக்கண வகுத்த முதல் மொழி நம்மொழி கல்தோன்றி மண்தோன்றா காலத்தில் முன் தோன்றிய மூத்த குடியான தமிழ்குடி. இம்மொழியின் வாயிலாக பதினெண்கீழ்க்கணக்கு அகப்பாடல்களில் இலக்கணநூலார் குறிப்பிட்டதிணை இலக்கியம் மரபையும் அதனுள் காணப்படும் யாப்பயையும் இக்கட்டுரை விரிவாக எடுத்துரைக்கின்றது.

**திணை விளக்கம்:**

முதலாவதாக திணை என்ற சொல் எப்படி தோன்றியிருக்கலாம். ஒவ்வொரு நிலத்திலும் வாழும் மக்களின் ஒழுக்கங்களை வைத்து வரையறுத்துள்ளனர். திணை என்பதற்கு ஒழுக்கம் என்பது பொருள் திணை என்ற சொல் பிரிவு என்ற பொருளையும் தருகின்றது. பின்பு தொல்காப்பியர் மொழியைப் பற்றிக் குறிப்பிடும் போது திணைகளை வேறு பெயர்களால் குறிப்பிடுகின்றார். திணையை நிலம், வீடு, குலம், குடில் என்ற பிற பொருளையும் தருகிறது. முதலில் திணை என்ற சொல் குடியிருப்பை குறித்து வந்த சொல் பின்பு குடியிருப்புகளில் வாழும் மக்களின் ஒழுக்கத்தை சுட்டிக்காட்டியது தொல்காப்பியர் திணை என்ற சொல் நிலத்தையும், இடத்தையும் குறிக்கும் என்பர்.

**“நிலனே காலம் கருவி என்றா**

**செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி (**தொல்.வேற்றுமை. நூற்பா. 29**)**

என்ற நூற்பாவின் மூலம் அறியலாம்

**திணை வகைகள்**

தமிழ் மாந்தர்கள் தம் வாழ்வினைஅகவாழ்வு, புறவாழ்வு என இருவகையாகக் கொண்டிருந்தனர்.

**"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்**

**முற்படக் கிளந்த எழுதிணை என்ப (தொல்.களவியல் . நூற்பா. 1)**

**கைக்கிளை**

'கைக்கிளையுடையது ஒருதலைக் காமம்' தொல்காப்பியர் இதனை இழிந்தகளவு என்றும் ஒவ்வாத காதல் என்றும் அழைப்பர். இக்காதல் ஒருவர் மட்டுமேஅன்பு கூறிமற்றொருவர் அன்பு செலுத்தாமல் விட்டு விடுவதாகும்.

**பெருந்திணை**

பெருந்திணை என்பது பொருந்தாக்காமம். **'மிக்க காமத்துமிடலொடு தொகை' (தொல் .பொருள் அகம் நூற்பா. 56)** இக்காதல் புரிவோர் ஒத்த வயதுடையவராகவோ அல்லது ஒத்த குடியினராகவோ இருத்தல் இயலாது ஆகவே இக்காதலும் பொருத்த மற்றவையாகவே திகழும் என்பர்

**அன்பின் ஐந்திணை**

ஐந்திணையுடையது அன்புக் காமம் என்று நம்பியகப் பொருள் குறிப்பிடுகிறது. சிறந்த அன்பு கொண்டு ஒழுகுதல் அன்பின் ஐந்திணை என்று மாறன் அகப்பொருள் விளக்குகின்றது. இக்காதலை உலகமாந்தர் அனைவரும் போற்றுவர். இக்காதல் கற்பில் முடியக்கூடிய இல்லறம் சிறக்க கூடிய காதலாக விளங்குகிறது.

**குறிஞ்சித்திணை**

மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலம் என்ப்படுகிறது. மலைப்பகுதி எப்பொழுதும் பசுமையாகவும், செழிப்பாகவும் வீற்றிருக்கும் நிலம். அங்கு வாழும் மக்கள் தினைவிதைத்தல், தேன்எடுத்தல், கிழங்கு அகழ்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுவர். ஆகவே அந்நில மக்கள் எப்பொழுதும் பொருளாதாரத்தில் சிறந்து விளங்குவர், ஆகவே எந்த பற்றாக்குறையும் இருந்தது இல்லை. அந்நில தலைவன் தலைவி எப்பொழுதும் சேர்ந்தே இருக்ககூடிய நிலை நிலவும் ஆகவே அம்மக்களின் உரிப்பொருளாக புணர்தலும் புணர்தல் நிமித்தமும் என்ற கருத்து அமைகிறது.

**முல்லைத்திணை**

தொல்காப்பியர் இத்திணையை முதலில் வைத்து பாகுபடுத்துவர். காரணம் முல்லைநில மக்கள் இல்லறத்திலும், கற்பொழுக்கத்திலும் சிறந்து விளங்ககூடியவராக இருந்திருக்கலாம் என்ற கருத்து நிலவி வருகிறது. இம்மக்கள் வாழும் பகுதிகாடும் காடுசார்ந்த பகுதியாகும். இந்நிலம் கால்நடை வளர்ப்பிற்கு ஏதுவாக இருந்ததால் அத்தொழிலையே முதன்மைத் தொழிலாகக் கொண்டனர். இத்திணையில் தலைவனை பிரிந்து தலைவியானவள் தன் வீட்டில் ஆற்றியிருப்பாள் அல்லது தலைவனது பிரிவை பொறுத்துக் கொள்ளுதல் என்ற காரணத்தினால் ஆற்றிருத்தலால் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் என்ற உரிப்பொருளைமையமிட்டு அமைகிறது.

**மருதத்திணை**

மருதநிலம் எங்குப் பார்த்தாலும் நீர் நிறைந்த பகுதியாகவும் கண்களுக்கு விருந்தூட்டும் பூக்கள், மரம்,செடி,கொடிகளாக இந்நிலம் காட்சியளிக்கும். காட்டுநிலத்திற்கும் கடற்கரை ஓரத்திற்கும், இடைப்பட்ட பகுதியாக இந்நிலம் விளங்குகிறது. வயலும் வயல்சார்ந்த பகுதியாக இருப்பதால் உப்புத் தன்மையோ, உவர்த்தன்மையோ இல்லாத நன்னீரே மருதநிலத்தில் காணப்பட்டது. இந்நிலத்தை மென்புலம் எனவும் அழைப்பர். இந்நில மக்கள் உழவர், உழத்தியராக வலம் வருவர். பொருளாதார ஏற்றத்தாழ்வு உண்டு பண்ணைக்காரரும் இருப்பர், தொழிலாளரும் இருப்பர், ஆகவே இந்நில மக்கள்

சிறுசிறு சண்டைகளாலும், பிரிவாலும் காணப்படுவதால் இந்நில உரிப்பொருளாக ஊடலும் ஊடல் நிமித்தமும் காணப்படும் நிலமாக வருணிக்கப்படுகிறது.

**நெய்தல் திணை**

கடலும் கடல்சார்ந்த பகுதியே நெய்தல் எனப்பட்டது. இங்கு உவர் மண்ணும் உவர்காற்றும் நிறைந்திருக்கும், நெய்தல் நிலப்பாடல்கள் களவினை எடுத்துரைக்கும் பாடலாகவே காணப்படுகிறது. இந்நிலமக்கள் மீன்பிடித்தல், மீனை உலரவைத்து கருவாடு செய்தல், உப்புவிற்றல், சங்குபொறித்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுவர், தன் தலைவன் மீன்படிப்பதற்கு கடலுக்கு போனவர் எப்பொழுது வருவார் என்று எதிர்ப்பார்த்து இரங்கலோடு காத்திருப்பதால் இந்நில உரிப்பொருளாக இரங்கலும் இரங்கள் நிமித்தமும் என்று பொருள்படுவதாக குறிக்கப்படுகிறது.

**பாலைத் திணை**

**“முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**நல்லியல் புயிழந்து நடுங்கு துயருறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும் (சிலப்பதிகாரம் காடுகாண் காதை. பா. 64-66)**

என்ற இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் காடுகாண் காதையில் கூறுவதன் மூலம் இந்நிலச் சிறப்பை தெரிந்து கொள்ள முடிகிறது தொல்காப்பியர் நிலப்பாகுபாட்டை குறிப்பிடும் பொழுது பாலைநிலத்தினை குறிப்பிடவில்லை. அதனால் அந்நிலத்திற்குறிய பொழுதும் உரிப்பொருளும் தொல்காப்பியரால் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. இந்நில தலைவன் தலைவி சேர்ந்து வாழக்கூடிய நிலமாக பாகுபடுத்த படவில்லை. ஏனென்றால் சுரம்மிகுந்த பாலையாக இருப்பதால் இந்நிலத்திற்குரிய உரிப்பொருள் பிரிதலும் பிரிதல்நிமித்தமும் என்று வரையறுக்கின்றனர்.

**நிலங்களின் பெயர் காரணம்**

திணை மலரால் பெயரிட்டு அழைக்கப்பட்டது. என்று இளம்பூரணர்வாயிலாக தெரியவருகிறது. பூக்கள் பழங்காலந்தொட்டே குறியீடுகளாக விளங்குகின்றன மணத்தையும் நிறத்தையும் தருவன பூக்கள் நல்லொழுக்கத்தினையும் பிறவற்றையும் குறிக்கிறது. நான்கு நிலத்திற்கும் பூக்கள் பெயர் வைத்தனர், பாலைக்கு வெள்ளையும் சாம்பலும் கலந்து இருவண்ணமாறான பாலைமலரைப் பெயராகச்சூட்டினர்.

**திணை மரபும் யாப்பும்**

சங்கஇலக்கிய அகப்பாடல்கள் மரபிலிருந்து பதினெண்கீழ்க்கணக்கு அகப்பாடல்கள் மாறுபட்டு அமைந்துள்ளன. ஓவ்வொரு காலக்கட்டத்தில் தோன்றும் இலக்கியங்கள் வடிவமைப்பிலும், கருத்தியல் அடிப்படையிலும், மரபியல் அடிப்படையிலும் யாப்புகளை கொண்டு விளங்குவதைக் காணலாம். ஒரு குறிப்பிட்ட காலத்தே குறிப்பிட்ட இடத்தே நிகழ்ந்த வினை, நிகழ்ச்சி கால இயக்கத்தின் போது மாறாது தொடர்ந்து செல்லுதலும் உண்டு. சிறுசிறு வேறுபாடுகளுடன் தொடர்தலும் உண்டு. குறிப்பிட்ட காலமும் இடமும் அல்லது இரண்டில் ஏதேனும் ஒன்றானும் பற்றி வேறுபாடமைந்து தொடர்தலும் உண்டு. பெரும்பான்மையும் மாறது தொடர்தலை மரபும் யாப்பும் என்கிறோம். அடிப்படை வேறுபாடுகளால் வேறுபடத்தொடர்தலை மரபுயாப்பு என்கிறோம். இத்தகைய மரபுயாப்புகள் நிலைக்களனாக நின்று இலக்கியப் பரிணாமத்தையும் வாழ்வியல் வளர்ச்சியையும் உணர்த்துகின்றன.

மரபுயாப்புகள் தோன்றல், கெடுதல், திரிதல் என்னும் நிலைகளில் அமையலாம். அம்மூவகை நிலைகள் தனித்தும் அமையலாம். இரண்டு மூன்று என ஒருங்கு கூடியும் அமையலாம். சங்ககாலத்தில் தோன்றிய பாடல்கள் அகமும், புறமும், அகப்புறம் சார்ந்தவையாக அமைந்துள்ளன. ஆனால் சங்கம்

மருவியகாலத்தில் அறம், அகம், புறம் என்ற வகையில் பாடல்கள் தோன்றின. அடி அளவிலும் சுங்கி நான் கடிக்குள் இப்பாடல்கள் நிற்கின்றன.

**தொகுப்புரை**

தொல்காப்பியர் திணைகளை நான்காகப் பகுத்து பின் அதன் வடிவமைப் பினைக் கூறியுள்ளது. திணைப் பாகுபாடு இரு நிலையுடையது எனவும் அத்திணைப் பெயர் மலரின் பெயரையே குறித்து நின்றது எனவும் உணரமுடிகிறது. அகத்திணைக் கூறுகள் மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் கருவி அதனை முதன்மையாகக் கொண்டே பாடுபொருள் அமைகின்றன என்ற செய்தினை இத்தலைப் பின் வாயிலாக அறியமுடிகிறது. பதினெண்கீழ்க்கணக்கு அகநூல்களில் திணை மரபும் யாப்பும் என்னும் இத்தலைப்பில் திணைவிளக்கம், அகத்திணை, புறத்திணைப்பற்றிய கோட்பாடுகள், கைக்கிளை, பெருந்திணை, அன்பின் ஐந்திணை பற்றிய செய்திகள், நிலங்களின் பெயர்காரணம், திணை மரபும் யாப்பும் என்ற செய்திகளும் திணைபாடு ஏற்படுத்திய சமூகவளர்ச்சி பெற்ற செய்திணையும் காணமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**

[1] சேனாவரையருரை. *தொல்காப்பியம் சொல்லதிகாரம்.*
[2] தமிழண்ணல். *தொல்காப்பியம் பொருளதிகாரம்.*
[3] மாணிக்கவாசகன். *சிலப்பதிகாரம்.*
[4] *பரிபாடல் மூலமும் உரையும்.* கழக வெளியீடு
[5] *மதுரைக் காஞ்சி பத்துப்பாட்டு மூலமும் உரையும்.* கழக வெளியீடு
[6] *புறநானூறு மூலமும் உரையும்.* கழக வெளியீடு

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.